

சென்னை அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (19.10.2026), பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, நே.சிற்றரசு, மயிலை த.வேலு ஆகியோர் பங்கேற்றனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக

லண்டனில் இந்திய மாணவர்கள் போராட்டம்!

லண்டன், அக்.21-

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி இங்கிலாந்து தலை நகர் லண்டனில் இந்திய மாணவர்கள் போராட் டம் நடத்தினர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் முறைகேடு விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணை யர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி இந்தியா வில் போராட்டம் தீவிரம டைந்துள்ளது.



தற்போது இந்த போராட்டம் லண்டன் வரை பரவியுள்ளது. சேவ் டெமாக்ரசி, எஸ்.எப்.ஐ மற்றும் சவுத் ஏசியா சாலி டிட்டி குரூப் உள்ளிட்ட பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் இதற்கு ஆத ரவு தெரிவித்தன. லண் டன் நாடாளுமன்ற தெரு வில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே கூடிய மாணவர்கள், "வாக்கு திருட்டை நிறுத்து" என கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட் டனர்.

இந்த போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு அருகே மற்றொரு குழுவி னர் கூடி "மோடி, மோடி" என முழக்கங்களை எழுப் பினர். இதனால் இரு தரப் புக்கும் இடையே மோதல் உருவாகும் சூழல் ஏற்பட் டதால் பதற்றம் நிலவியது.

வெள்ளத் தடுப்பு: திருப்புகழ் கமிட்டியின் நீண்டகாலப் பரிந்துரைகளை நிறைவேற்றுக! – கனமழையால்

தேங்கிய நீர், உடனே வடிந்தது! 'திராவிட மாடல்' அரசின் சாதனை!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

சென்னை, அக். 21 –

"ஓரிரவில் பெய்த கனமழையால் தேங்கிய நீர், அந்த இரவு விடிவதற்குள் வடிந்துவிட்டது! திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் நிகழ்த்திய சரித் திரம் இது!" என்றும், திராவிட மாடல் அரசின் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கைத் திட்டப் பணிகளைத் தொடர்ந்து, திருப்பு கழ் கமிட்டியின் நீண்டகாலப் பரிந்து ரைகளை நிறைவேற்றிட வேண்டும் என்றும், முதலமைச்சருக்கு முன்னாள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு :-

17.10.2026 அன்று சென்னை மாநகரில் பெய்த கனமழையால் தேங்கிய மழைநீர், திராவிட மாடல் அரசு கடந்த 5 ஆண்டுகளில் மேற் கொண்ட பல்வேறு மழைநீர் வடிகால் கள் அமைக்கும் நடவடிக்கைகளின் காரணமாக உடனடியாக வெளியேறி, சென்னைவாழ் மக்களின் பாதிப்பைப் பெருமளவில் குறைத்துள்ளது. இதை நடுநிலையாளர்கள் உணர்கிறார்கள். சென்னை வாழ் பெருமக்கள் புரிந்து கொண்டு பாராட்டுகிறார்கள்.

ஆனால், திராவிட மாடல் அரசிற்குக் கிடைத்துள்ள பாராட்டுகளைப் பொறுத் துக்கொள்ள முடியாத த.வெ.க.வினர், சமூக வலைதளங்களில் "4,000 கோடி ரூபாய் செலவு செய்தது இதற்குத் தானா?" என்ற அளவில் முகாந்திர மில்லாத வெட்டி விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

திராவிட மாடல் அரசில் எண் ணற்ற திட்டங்கள் சென்னை மாநகரத்திற்காக நிறைவேற்றப் பட்டன. ஆட்சிக்கு வந்தவுடன் திருப்புகழ் கமிட்டியை அமைத்து, அதன் பரிந்துரைகளைப் பெற்று, அவற்றுள் இடைக்கா லப் பரிந்துரைகளை உடனே நிறைவேற்றிய அரசு, எங்கள் அன்றைய முதலமைச்சரும் இன்றைய கழகத் தலைவரு மான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்தில் உறுதிபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட மாடல் அரசு சென்னை மாநகருக்கு மட்டும் நிறைவேற்றிய திட்டங்களில் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இடைவிடாமல்
தூர்வாரும் பணிகள்!

கடந்த ஐந்தாண்டுகளில் 1,000 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடி கால்கள் அமைக்கும் பணிகளை முடித்தோம். மீதமுள்ள பணிகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள் ளப்பட்டு வந்தன! கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் மட்டும் 600 கிலோ மீட்டருக்கு மேல் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டன. 37 நீர்வழிக் கால்வாய்களில் வெள்ளத் தடுப்புச் சுவர் களின் உயரத்தை அதிகரித்து, வெள்ள



அபாயத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிலத்தடிநீர்மட்டத்தை உயர்த்தவும், வெள்ளநீர் தேங்குவதைத் தவிர்க்கவும் 770 இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் கொசஸ்தலையாறு, கோவ ளம் வடிநிலப் பகுதிகளும் அடக்கம்! சென்னை மாநகராட்சியில் உள்ள 60 நீர்நிலைகளைப் புனரமைக்கவும், தூர் வாரவும், கரைகளைப் பலப்படுத்தவும், நீர் சேமிப்புத் திறனை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளை இடைவிடாமல் தொடர்ந்து செய்து வந்ததும் திராவிட மாடல் அரசுதான்!

விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப் புப் பணிகள், நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பணிகள், கோவளம் வடிநிலப் பணிகள், கொசஸ் தலையாறு வடிநிலப் பணிகள், டிரஸ்ட் புரம் கால்வாய்ப் பணிகள், கடப்பாக்கம் ஏரி மேம்பாடு, அடையாறு ஆற்றுப் புனரமைப்பு, ஓட்டேரி நல்லா மற்றும் விருகம்பாக்கம் கால்வாய்கள் புனர மைப்பு, தூர்வாரும் பணிகள் எனவும், வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு கள் மற்றும் பேரிடர் மீட்பு, நிவாரண மையம் அமைக்கும் பணிகள் எனவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, சென்னை மாநகருக்குக் கனமழைக ளால் ஏற்படும் பாதிப்புகளை அடியோடு நீக்கத் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை நிறைவேற்றியதும், களப் பணியாற்றியதும் எங்கள் ஆட்சிதான்.

இந்தச் சாதனைத் திட்டங்களால் ஓரி ரவில் பெய்த கனமழையால் தேங்கிய நீர், அந்த இரவு விடிவதற்குள் வடிந்தி ருக்கிறது! கழக அரசு கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் நிகழ்த்திக் காட்டியுள்ள சரித்திரம் இது!

எங்களின் சாதனைக்கு
எடுத்துக்காட்டு!

சென்னை மாநகராட்சிக்குத் திரா விட மாடல் அரசு என்ன செய்தது என்று திட்டமிட்டுப் பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து, "ரீல்ஸ்" விடுவோருக்கு, ஆட்சியிலிருந்து நாங்கள் நிகழ்த்திய "ரியல்" சாதனைகள் புரியவில்லை என்றே தெரிகிறது. கனமழை என்றா லும், வெள்ளம் என்றாலும் முதலில் ரிப்பன் மாளிகைக்கு வந்து ஆய்வு செய் பவராக எங்கள் முதலமைச்சர் இருந் தார். வெளியூர்ச் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு இரவில் திரும்பினால்கூட நேராக ரிப்பன் மாளிகை கட்டுப்பாட்டு அறைக்கு வந்து ஆய்வு செய்யும் நிர்வா கத் திறமைக்குப் பெயர் பெற்றவர் எங் கள் அன்றைய முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

இப்போது முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் மாளிகைக்குச் சென்று ஆய்வு செய்திருக்கிறார். அதன்பிறகு பேட்டிய ளித்த சென்னை மாநகராட்சி ஆணை யர் சமீரன், "கடந்த காலங்களில் இருந் ததைவிட இப்போது மழைநீர் தேங்கி நிற்கும் இடங்கள் குறைந்துள்ளன" என்று கூறியிருக்கிறார். இதுதான் எங் கள் ஆட்சியின் சாதனைக்கு எடுத்துக் காட்டு!

மேலும், சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த ககன்தீப் சிங் பேடி தான் இப்போது நகராட்சி நிர்வா கம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை யின் அரசு கூடுதல் தலைமைச் செயலா ளராக இருக்கிறார். அப்போது சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த குமரகுருபரன் தற்போதும் தலைமைச் செயலகத்தில் அரசுச் செயலாளராகத் தான் இருக்கிறார். ரிப்பன் மாளிகைக் குப் போன முதலமைச்சர், இந்த இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் கேட்டாலே, கடந்த ஐந்தாண்டு காலத் தில் சென்னை மாநகராட்சியில் திரா விட மாடல் அரசால் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள் அனைத் தையும் மிக எளிதாகப் பட்டியலிட்டுச் சொல்வார்கள் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

இன்னொன்று, திருப்புகழ் கமிட்டி யின் பரிந்துரைகள் மீது ஏதோ எங்கள் அரசில் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தவறான பிம்பத்தைத் திட்ட மிட்டுத் தொடர்ந்து உருவாக்கி வருகி றார்கள். அது தவறு! திருப்புகழ் கமிட்டி கொடுத்த பரிந்துரைகளில் இடைக்கா லப் பரிந்துரைகள், நீண்டகாலத் திட்டங் களுக்கான பரிந்துரைகள் என்ற அடிப் படையில் இருவிதமான பரிந்துரைகள் இருந்தன. அவற்றில் இடைக்காலப் பரிந்துரைகளை முதலில் நிறைவேற்றிய அரசுதான் திராவிட மாடல் அரசு.

சட்டமன்றத்திலேயே நான் இதுகுறித் துப் பேசும்போது, "திருப்புகழ் கமிட்டி யின் இடைக்காலப் பரிந்துரைகளை நிறைவேற்றியுள்ளோம். நீண்டகாலப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற் குள் தேர்தல் வந்துவிட்டது" எனக் கூறி, "இப்போதும் அறிக்கை அரசிடம்தான் இருக்கிறது. தாராளமாக அந்த நீண்ட காலத் திட்டங்களை நிறைவேற்றலாம்" எனக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

திருப்புகழ் கமிட்டியின் நீண்டகாலப் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண் டியதும், ஏற்கெனவே திராவிட மாடல் அரசில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழை நீர் வடிகால் கால்வாய் பணிகள் உள் ளிட்ட சென்னை மாநகராட்சியின் உட் கட்டமைப்புத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து நிறைவேற்ற வேண்டி யதும் த.வெ.க. அரசின் பொறுப்பு என் பதை முதலமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குக! மிரட்டல் விடுத்த

த.வெ.க. நிர்வாகியை உடனே கைது செய்க!

சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்தல்!

சென்னை, அக். 21 –

போதைப் பொருள் குறித்த செய் தியை வெளியிட்டதற்காக செய்தியா ளர்களை மிரட்டிய நாகை மாவட்டத்தின் தமிழக வெற்றிக் கழக நிர்வாகியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அறிக்கை வருமாறு:–

137 கிலோ மெத்தபெட்டமைன் என்ற போதைப் பொருளை வைத்தி ருந்த தமிழக வெற்றிக் கழகத்தின் நாகை மாவட்ட செயற்குழு உறுப்பினர் பூபாலன் என்பவரை, மத்திய வருவாய் குற்றப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இரண்டு தினங்களுக்கு முன் கைது செய்தனர். அவரோடு சேர்ந்து மேலும் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச அளவில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த போதைப் பொருளை இலங்கைக்கு கடத்தத் திட்டமிட்டிருந்ததாக வருவாய் புலனாய் வுத் துறை சார்பாக வெளியிடப்பட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் இவ்வளவு பெரிய அளவிலான போதைப் பொருள் பிடி பட்டுள்ளது குறித்தும், கைது செய்யப் பட்ட பூபாலன் உட்பட அனைவர் மீதும் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த செய்தி யாளர்கள் தொடர்ந்து செய்தி சேக ரித்து, அவர்கள் சார்ந்த நிறுவனங் களுக்கு வழங்கி வருகின்றனர்.

கடந்த 17.10.26 அன்று நாகப்பட் டினம் சுங்கத்துறை அலுவலகத்தில் போதைப்பொருள் கடத்தல் தொடர் பாகக் கைது செய்யப்பட்ட நபர்கள் குறித்து செய்தியாளர்கள் அனை வரும் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட் டுக்கொண்டிருந்தனர். அப்போது, நாகப்பட்டினம் மாவட்ட தெற்கு நகரச் செயலாளர் பொறுப்பில் உள்ள பாலு என்பவர், பார்த்திபன் என்ற செய்தியா ளரை வாட்ஸ்அப் மூலம் அழைத்துள் ளார். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையையும், மாவட்டச் செயலா ளர் சுகுமாரனையும் அவமானப்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டுள்ளதா கவும், இதை உடனே நிறுத்த வேண் டும் என்றும் பார்த்திபனை எச்சரித் துள்ளார். அத்துடன், ஸ்பீக்கர் போனை ஆன் செய்யச் சொன்ன பாலு, அங்கு செய்தி சேகரித்துக்கொண்டிருந்த நாகப் பட்டினத்தைச் சேர்ந்த செய்தியாளர் கள் அனைவரையும் மிரட்டும் வகை யில் "இதுதான் உங்களுக்குக் கடைசி எச்சரிக்கை, இனி இதுபோல் நடந் தால் வேறுமாதிரி ஆகிவிடும்" என்று செய்தியாளர்கள் அனைவருக்கும் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து நாகப்பட்டினம் பத்திரிகையாளர் மன்றம் சார்பாக, செய்தியாளர்களுக்கு மிரட்டல் விடுத்த பாலுவுக்கு எதிராக மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகாரைத் தொடர்ந்து பாலு மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படு கிறது. இருந்தபோதும், பாலு இது வரை கைது செய்யப்படவில்லை.

செய்தி வெளியிட்டதற்காகப் பத்திரி கையாளர்களை மிரட்டிய தமிழக வெற்றிக் கழகத்தின் நாகப்பட்டினம் மாவட்ட தெற்கு நகரச் செயலாளர் பாலுவின் நடவடிக்கையை சென்னை பத்திரிகையாளர் மன்றம் வன்மை யாகக் கண்டிக்கிறது.

அவர்மீது பத்திரிகையாளர்கள் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் அவரை உடனே கைது செய்ய நட வ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்துகிறது.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த பத்திரி கையாளர்கள் அனைவரும் அச்ச மின்றி செய்தி வெளியிடுவதை உறு திசெய்யும் வகையில், அவர்களுக்கு உரிய பாதுகாப்பைத் தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும் என்றும் சென்னை பத்திரிகையாளர் மன்றம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர், மாவட்ட சார்பு அணி அமைப்பா ளர்களுடன் கழக மறு சீரமைப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் செம்பனார்கோயிலை அடுத்த மேமாத்தூர் ஏ.ஆர்.மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பேசினார். உடன் தலைமைக் கழக பிரதிநிதி கோவி.செழியன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பிரதிநிதி மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன், கழக உயர்நிலை செயல்திட்ட குழுத் தலைவர் குத்தாலம் பி.கல்யாணம், விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், எம்.எம். சித்திக், பி.எம். ஸ்ரீதர், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மு.ஞானவேலன் மற்றும் பலர் உள்ளனர்.

நாகை செய்தியாளர்களுக்கு மிரட்டல்:

ஊடகச் சுதந்திரத்தை அச்சுறுத்தும் செயலுக்கு வன்மையான கண்டனம்!

மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, அக். 21-

நாகை மாவட்டத்தின் செய்தியாளர்களை த.வெ.க.வினர் மிரட்டி யதற்கு கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளி யிட்டுள்ள மனித நேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகை சட்டமன்ற உறுப்பி னருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்கள், ஊடகச் சுந்தி ரத்தை அளும் கட்சியினர் அச்சுறுத்துவதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவ ரது அறிக்கை வருமாறு: -

நாகப்பட்டினம் மாவட் டத்தில் 137 கிலோ உயர்ரக போதைப்பொருட்கள் பறி முதல் செய்யப்பட்டு, அவற்றுடன் தொடர்பு டையவர்கள் கைது செய் யப்பட்டுள்ள சம்பவங்கள் குறித்து செய்திகளை வெளி யிட்டு வரும் செய்தியாளர் களுக்கு மிரட்டல் விடுக்கப் பட்டிருப்பது கடும் கண்ட னத்திற்குரியது.

போதைப்பொருள் பறி முதல் சம்பவத்தில் தொடர் புடையவர்கள் ஆளும் தமி ழக வெற்றிக் கழகத்தில் பொறுப்புகளில் இருந்ததா கக் கூறப்படுகிறது. இச்சம் பவத்தைத் தொடர்ந்து அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிப் பும் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இச்சம்ப வம் தொடர்பாகச் செய்தி வெளியிடக் கூடாது என்று வலியுறுத்தி, நாகப்பட்டி னத்தைச் சேர்ந்த செய்தி



யாளர் பார்த்திபனை வாட்ஸ்அப் வாயிலாகத் தொடர்புகொண்ட தவெக நிர்வாகி ஒருவர், அனைத்து செய்தியாளர்களுக்கும் மிரட்டல் விடுக்கும் வகை யில் பேசியிருப்பதாகத் தக வல் வெளியாகியுள்ளது. இத்தகைய செயல் வன்மை யாகக் கண்டிக்கத்தக்கது.

போதைப்பொருள் புழக்கம் தொடர்பான செய்திகளை வெளியிடு வது செய்தியாளர்களின் கடமை. அந்தக் கடமை யைச் செய்வதற்காக அவர் களை மிரட்டுவதும், உண் மைகளை வெளிக்கொண்டு வருவதைத் தடுக்க முயல்வ தும் ஜனநாயகத்திற்கும் ஊடகச் சுதந்திரத்திற்கும் எதிரான செயல்களாகும்.

போதைப்பொருள் ஒழிப்பு என்பது சமூகத்தின் எதிர்காலத்தைக் காக்க வேண்டிய முக்கியமான பொறுப்பாகும். இத்தகைய விவகாரங்களில் உண்மை களை வெளிப்படுத்தும் ஊடகங்களுக்குத் துணை நிற்க வேண்டுமே தவிர, அவர்களை அச்சுறுத்தி மௌனமாக்க முயற்சிப் பது ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

இச்சம்பவம் தொடர் பாக நாகப்பட்டினம் செய் தியாளர்கள் சார்பில் மாவட்டக் காவல் கண்கா ணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனவே, இப்புகார் மீது மாவட்டக் காவல்துறை உடனடியாக உரிய விசா ரணை மேற்கொண்டு, செய்தியாளர்களை மிரட் டியதாகக் கூறப்படும் நபர் மீது சட்டப்படி நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயகத்தின் நான்கா வது தூணான ஊடகங்களின் குரலை மிரட்டல் களால் ஒடுக்கிவிட முடியாது. உண்மையை வெளிப்படுத் தும் செய்தியாளர்களின் பாதுகாப்பையும் ஊடகச் சுதந்திரத்தையும் காப்பது அரசின் கடமையாகும்.

இவ்வாறு அவர் கண்ட னம் தெரிவித்துள்ளார்.